# Gospel Truth

# காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 30 – International Editor : MICHAEL W.SMITH – இதழ் - 30


## துதியின் வல்லமை

யூதாவின் ராஜாவாகிய யோசபாத் தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பதாக உபவாசத்திலும், ஜெபத்திலும் தரித்திருந்தான். 2நாளா 20 ம் அதிகாரத்திலே ஏராளமான ஜனங்கள் யோசபாத்திற்கு விரோதமாய் யுத்தம் பண்ணும்படி கூடி வந்தார்கள். அப்பொழுது தம் ஜனங்களுக்கு அவர்களை எதிர்கொள்ளத் திராணி யில்லாததைக் கண்டு, பயந்து தேவனிடத்தில் மன்றாடினான். எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தாவே, பரலோகத்திலிருக்கிற நீர் அல்லவோ தேவன்; தேவரீர் ஜாதிகளுடைய ராஜ்யங்களையெல்லாம் ஆளுகிறவர் ;

உம்முடைய கரத்திலே வல்லமையும் பராக்கிரமமும் இருக்கிறது, ஒருவரும் உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முன்பாக இந்த தேசத்துக் குடிகளைத் துரத்திவிட்டு இதை உம்முடைய சிநேகிதனாகிய ஆபிரகாமுடைய சந்ததிக்கு என்றைக்குமென்று கொடுக்கவில்லையா?. எங்கள் தேவனே,அவர்களை நீர் நியாயந் தீர்க்கமாட்டீரோ?. எங்களுக்கு விரோதமாக வந்த இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக்குப் பெலனில்லை, நாங்கள் செய்ய வேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை;

ஆகையால் எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறது என்றான். கர்த்தர் பிரதியுத்தரமாக நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப் பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்கிறார் இந்த யுத்தத்தைப் பண்ணுகிறது நீங்கள் அல்ல, யூதாமனுஷரே எருசலேம் ஜனங்களே, நீங்கள் தரித்துநின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்;

பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் ; நாளைக்கு அவர்களுக்கு எதிராகப் புறப்படுங்கள்; கர்த்தர் உங்களோடே இருக்கிறார் என்றான்,கர்த்தரை நம்புங்கள் என்று சொல்லி , பரிசுத்தமுள்ள மகத்துவத்தைத் துதிக்கவும்,கர்த்தரைப் பாடவும் பாடகரை நிறுத்தினான்.அவர்கள் பாடித்துதிசெய்யத் தொடங்கினபோது , அவர்களுக்குள் ஒருவருக்கு ஒருவர் விரோதமாய் எழும்பினதினால் அவர்களே வெட்டுண்டு விழுந்தார்கள். ஜனங்கள் தேவனைத் துதித்தார்கள்.

துதியிலே எவ்வளவு வல்லமை தேவனைத் துதித்துப் பாடும்போது எதிரிகள் தோற்கடிக்கப்பட்டார்கள் .நம் வாயைத் திறந்து தேவனை துதித்து ,நம் இருதயத்தை உயர்த்தும் போது, ஆவிக்குரிய யுத்தத்திலும் நாம் ஜெயிப்போம்; அவர் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவனாயிருப்பதினால் சங்கீதங்களினாலும், ஞானப்பாட்டுக ளினாலும் சாட்சிகளினாலும் அவரைப் பாடுங்கள் (சங் 22:3). கோலியாத் போன்ற ராட்சசனும் எரிகோ கோட்டையும் உங்கள் முன் நிற்கும்போது , தேவனைத் துதித்து சாத்தானை ஜெயிக்கும் வல்லமையை அடைவோம் .இஸ்ரவேல் ஜனங்கள் எரிகோ கோட்டையைச் சுற்றி ஆறு நாட்கள் அமைதியாக வலம் வந்தனர். ஏழாவது நாளிலோ 7 முறை சுற்றினார்கள்.



**“அவர் துதிகளில் வாசம் செய்யும் தேவன். ஆகையால் அவருடைய புகழைப் பிரஸ்தாபப்படுத்தும் வண்ணமாக அவர் செய்த அதிசயங்களையும், சாட்சிகளையும் துதியின் வாயிலாக பாடி அவரைக் கனம் பண்ணகடவோம்”**


| | | | | |
|---|---|---|---|---|
| துதியின் வல்லமை<br>பக்கம் - 1 | தலையங்கம்<br>பக்கம் - 3 | வேதபாட வழிகாட்டி<br>துதி<br>பக்கம் - 4 | ஒருநோக்கு செய்தி<br>தேவனுக்கே துதி உண்டாகட்டும்<br>பக்கம் 5 – 6<br>கேள்விக்கு என்ன பதில்?<br>பக்கம் - 7 | உங்களுக்குத் தெரியுமா?<br>ஏற்றசமயத்தில் ஒரு வார்த்தை<br>பக்கம் - 8 |

# வேதாகமம்,




## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3:16-17; 2 பேது 1:20-21; மத் 24:35

**அன்பு**
மத் 22:37-40; யோவா 14:21-23, 1 யோவா 4:7-11

**மனந்திரும்புதல்:**
அப் 3:19; 17:30; 2 கொரி 7:10

**புதுசிருஷ்டி**
யோவா 3:3-7; 2 கொரி 5:17; ரோம 6:1-4, எபே 2 :1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5:18; மத் 1:21 ; யோவா 8: 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1:8; 15:8-9; 19:2

**பரிசுத்தம்:**
லூக் 1:73-75; எபி 12:14; 1 பேது 1:15-16; தீத்து 2: 11-12; ரோம 6:22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17:20-21; ரோம 14:17; யோவா 18:36.

**சபை-** அப் 2:47; எபே 4:4-6; 1 கொரி 12 :12-13; கொலோ 1:18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23; கலா 3:28; வெளி 18:2-4

**நியமங்கள்**
மத் 28:19-20; 26:26-30; 1 கொரி 11 :23-27; யோவா 13:14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4:18, ஏசா 53 :4,5, யாக் 5 :13-16

**விவாக முறைமை**
மத் 19:5-6; லூக் 16 :18; ரோம 7:2-3; 1 கொரி 7:10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2:9-10; 1 கொரி 11 :14-15; உபா 22 :5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 :28 ,29; 2 கொரி 5 :10; மத் 25 :31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4: 23,24; எபே 5 :19; 2 கொரி 3 :17

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16:15

கடைசி முறை எக்காளங்களை ஊதுகையில் ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள் ,மகா ஆரவாரத்தோடே முழங்குகையில் அலங்கம் இடிந்து விழுந்தது. இப்படியாக பட்டணத்தைப் பிடித்துக் கொண்டார்கள் (யோசுவா 6:16-20) .தேவனுக்கே துதி உண்டாகட்டும். சிலநேரங்களில் ஜனங்கள் வெறும் நன்றி மட்டும் தேவனுக்கு சொல்லிவிட்டு,ஏன் என் வாழ்வில் இந்த கோட்டை போன்ற பிரச்சனை நீங்கவில்லை என நினைப்பார்கள் .எக்காள சத்தம் போன்ற ஆவிக்குரிய துதியின் சத்தம் உயரும்போது தான் ஆவியானவர் கிரியை செய்ய முடியும்.அவர் மகா பெரியவர். அவருக்கே சகல துதியும் கனமும் உரித்தாகட்டும். இருளான நாட்களை நாம் நம் வாழ்வில் சந்திக்க நேரிடும் போது விசுவாசத்தோடு, தேவனைத் துதியுங்கள். இருள் நிச்சயமாய் மாறும். நம்மைச் சார்ந்து



பிரச்சனைகளை எதிர் கொண்டு பலவீனப்படும் போது அதை விட்டுவிட்டு, தேவன்பேரில் நம்பிக்கை யாயிருந்து, அவருக்கு துதி பலிகளை ஏறெடுக்கும் போது மகா பெரிய யுத்தம் வந்தாலும் எதிர்கொள்ள முடியும். எல்லாம் வல்ல நம் பராபரனின் நினைவுகளுக்கு நம்மை கொண்டுசேர்ப்பதே துதிபலி ஏமாற்றங்களின் வேளை யிலும், மன அழுத்தங்களோடு காணப்படும் சோர்வின் நேரங்களிலும் தேவனைத் துதித்துப் பாருங்கள் .

> **“சோர்வின் நேரங்களில் தேவனை துதிக்கும் போது பரலோகத்தின் வாசல்கள் திறக்கப்பெற்று நம்முடைய ஆவியில் உற்சாகமும் புதிய உத்வேகமும் காணப்படும் ”**

அப்போ 16 : 22-26 ல் பவுலும், சீலாவும் அநேக அடிகள்பட்டு, சிறைச்சாலையிலே வைக்கப்பட்டார்கள்.அவர்களுடைய கால்களை தொழுமரத்திலே கட்டி வைத்தார்கள்.கசப்பான ஓர் அனுபவம் அது. தேவனுடைய சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததின் விளைவாகதான் அடியும், உதையும், சிறைச்சாலையின் வேதனையும் அவர்களுக்கு கிடைத்த பரிசு.ஆயினும் நடுராத்திரியிலே ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள். அந்த பாட்டை கேட்கும்போது மனங்கசந்து பாடினதுபோல அல்ல, உண்மையான இருதயத்தோடு தேவனைத் துதிக்கும் துதி அது.அப்படி துதித்துக் கொண்டிருக்கும் போதே சிறைச்சாலையின் கதவுகள் அசையும்படியாக பூமி அதிர்ந்து எல்லாருடைய கட்டுகளும் கழன்று போயிற்று.நம் இயேசு ராஜாதி ராஜா .அந்த இரவு அவர்களுக்கு இருளாயிருந்தபோதும் அதை வெளிச்சமாக்கினார்.

தேவபிள்ளைகளே பரலோகத்திலே உங்கள் தொனி கேட்கப்படும். புது ஆவியையும் ,புது பெலனையும் அவர் உங்களுக்குத் தருவார். மதில்சுவர் போன்ற பிரச்சனையானாலும் சரி, பள்ளத்தாக்கிலும், மலைகளிலும் அக்கினியிலும் , துயரங்களிலும் இயேசுவையே நோக்கி துதி செய்வோமாக .அவர் தந்த இரட்சிப்பிற்காக அவரை ஸ்தோத்தரிப்போம் . அவருடைய இரக்கத்திற்காக அவரை துதிப்போம். அவருடைய அன்பின் நற்கிரியைகளுக்காக அவரை ஸ்தோத்தரிப்போம் . தேவனுடைய வல்லமை வெளிப்படும்படியாக துதிப்போம் . மனம் சோர்ந்து போன நேரங்களில் தேவனை நோக்கி துதித்துப் பாருங்கள். தேவனுக்கு துதிபலிகளை ஏறெடுக்கும்போது சாத்தான் நம்மைவிட்டு ஓடிப்போவான். தேவனுக்கே மகிமையுண்டாவதாக. ■

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** *என்ற இணையதள முகவரியை பார்க்கவும். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள்.*

*படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :-*

**டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பெல் ட்ருத், 2/227 கோலார்பட்டி,**
**பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

Editorial

# ஆசிரியரின் தலையங்கம்

ஜீவனைப் பார்க்கிலும் உமது கிருபை நல்லது; என் உதடுகள் உம்மைத் துதிக்கும் – சங்கீதம் 63 : 3

இந்த இதழிலே தேவனுக்கு துதி செலுத்துதைக் குறித்துப் பார்க்க இருக்கிறோம். துதியானது அவருக்கு கனத்தையும் , மகிமையையயும் கொண்டு வரும் . கர்த்தர் நமக்காக யாவையும் செய்து முடித்தார் . அவருக்கு நம்முடைய உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை ஏறெடுப்போம் சோதனை வேளையிலும் கூட நம் வாயினாலும் , இருதயத்தினாலும் தேவனுக்கு துதிசெய்ய தயங்ககூடாது பல்வேறு நியாயாசனங்களும்,நீதிநெறிகளும் வேதத்திலே சொல்லப்பட்டிருந்த போதிலும் கூட ,துதியைக் குறித்த சம்பாஷனை தேவனுடைய பரிசுத்த ஜனங்களுக்கு மிகவும் முக்கியத்துவத்தை இழந்து போய்விடக்கூடாது.

நான் அலுவலகத்திலே இருக்கும் போதோ அல்லது ரோட்டில் வாகனம் ஓட்டிச் செல்லும்போதோ தேவனைத் துதித்துக் கொண்டே செல்வது எனக்கும் தேவனுக்கும் இடையே உள்ள ஐக்கியம் பெருகியிருப்பதாக உணர்வதுண்டு. ஆராதனைகூட்டங்களில் தேவனைத் துதிப்பது உன்னதமான அனுபவம். இவ்விதமான துதிக்கு இடையூறாக எதிரியான பிசாசானவன் நயவஞ்சகமாய் செய்யும் சூழ்ச்சியை பார்ப்போம்.

தேவனுடைய பரிசுத்தவான்கள் தேவனைத் துதிப்பதையும் , ஸ்தோத்திர பலி, நன்றிபலிகளை ஏறெடுப்பதிலும் மிகவும் கவனமாய் நடந்தார்கள். பல பாடல்களில் தேவனைத் துதிப்பதும், தாழ்மையையும் காணகூடும் ஆவியானவரின் வழிநடத்துதலோடு , இதயபூர்வமான நன்றியை தேவனுக்கு தெரியப்படுத்துவதே அவரை ஆராதிப்பதற்கு ஏற்ற ஒழுங்கு சகல சபைக்கூட்டத்தினர் பாடல் பாடும் போது ஒருவிதமான உணர்ச்சி பொங்கும் செயல்களில், ஆவியில் நிறைவது போல துதித்து விட்டு, இசையின் சத்தம் ஓய்ந்ததும் தாங்களும் ஓய்ந்துவிடுகிறார்கள்.

ஆனால் தேவன் தம்முடைய பிள்ளைகள் தம்மை ஆவியோடு , உண்மையோடும் ஆராதிக்க விரும்புகிறார். ஆனால் நாமோ வெளிப்புறமான ஆவிக்குரிய ஆராதனை வீரர்களாகவும் உள்ளார்ந்த பற்று இல்லாதவர்களாகவும் தேவனுக்கு முன்பாக நிற்கிறோம். துதியின் வாழ்வில் வேதத்தின் கருத்துக்கு புறம்பாக செயல்படுபவர்களும் இருக்கிறார்கள். துதிப்பது சபை ஆராதனைகளில் மட்டும் அல்ல ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்விலும் துதி இருக்க வேண்டும்.

ஆன்லைனில்

அதிகமாக தெரிந்துகொள்ள

*www.thegospeltruth.org*

# கைகளை உயர்த்துங்கள்



உமது நாமத்தைச் சொல்லி கையெடுப்பேன் –சங் 63:4

பழைய ஏற்பாட்டில் இருந்து புதிய ஏற்பாடு நாள் மட்டும் எல்லா இடங்களிலும், பொதுவாக தேவஜனங்கள் தேவனை துதிக்கும் போது தங்கள் கைகளை உயர்த்துவதுண்டு. நமக்கு எல்லாவற்றையும் அருளிச் செய்கிற தேவனுக்கு மனத்தாழ்மையுடன் ,முழு உள்ளத்தோடும் பரலோகத்தின் தேவனாம் நம் இரட்சகருக்கு கனத்தை தெரிவிக்கும் தருணம் அது.

சீயோன் கீதங்கள் பாடப்படும் போது, கைகளை உயர்த்தி, கைகளை அசைத்து தேவனைப் புகழ்ந்து பாடுவது. அவருக்கு மகிமை செலுத்துவதாகும். துதியின் மகிமையை வார்த்தைகளால் விவரிப்பதை ,அதன் உணர்வு மிகவும் அருமையானது.

# வேதபாட வழிகாட்டி

## பொருள் : துதி

**வேத வாசிப்பு :** பூமியின் குடிகளே , எல்லாரும்  கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள். மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்து ,ஆனந்த சத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள் . அவர் வாசல்களில் துதியோடும் , அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும்  பிரவேசித்து , அவரைத் துதித்து , அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்
சங் 100 : 1-2,4

**வரையறை:** துதிப்பது  என்பது அவருடைய  நாமத்தை ஸ்தோத்தரிப்பது , புகழ்ந்து  பாடுவது  இன்னும் வார்த்தை அல்லது பாடல்களால் அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தி ,ஆராதிப்பதைக் குறிக்கிறது .

**செய்திச் சுருக்கம் :** சகல துதிக்கும் , கனத்திற்கும் அவரே பாத்திரர் நம் வார்த்தைகளாலும், பாடல்களாலும் , அவரைப்  புகழ்ந்து பாடுவதும் ஆராதிப்பது நம் கடமை  உண்மையான துதிபலி  மாம்சீகத்திலிருந்து வெளிப்பட கூடாது . மாறாக ஆவிக்குரிய பரிசுத்த வாழ்வின் வெளிப்பாடாக அது அமைய வேண்டும் .நம்முடைய துதிபலியானது பரலோகத்தின் வாசல்களை திறந்து தேவனுடைய பிரசன்னமும் ,ஆசீர்வாதமும் அடைய வழிகோலும்.

### I.துதி செய்ய கட்டளையிடப்பட்டது

A. வெளி 19:4-7  தேவனுடைய  ஊழியக்காரர்கள்
B. ரோமர் 15:9-11 உம்முடைய நாமத்தைச் சொல்லி, சங்கீதம் பாடுவேன்
C. சங் 117:1-2 எல்லா ஜாதியார் எல்லா ஜனங்கள்
D. நாளா 16:23-36
E. எபி 13:15 அவருடைய நாமத்தைத்  துதிக்கும் ஸ்தோத்திரபலி

### II.பாடி தேவனுக்கு நன்றி செலுத்துதல்

A. சங் 9:11 கீர்த்தனம்பண்ணி
B. சங் 107:1-2 சத்துருவின் கைக்கு நீங்கலாக்கி மீட்கப்பட்டதால் அவரைத் துதியுங்கள்
C. எபே5:19-20 பாடிக் ,கீர்த்தனம் பண்ணி தேவனை ஸ்தோத்தரியுங்கள்

### III. துதிப்பதற்கான காரணங்கள்

A. லூக் 10:19-20 உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறது
B. 1சாமு 4 : 5-6  கர்த்தருடைய பிரசன்னம்
C. சங் 29:2 கர்த்தருடைய நாமம் மகிமைப்படும்படியாக
D. யோவேல் 2:26 உங்களை  அதிசயமாய் நடத்தி வந்த தேவன்
E. சங் 147:1 துதித்தலே இன்பமும் ஏற்றதுமாயிருக்கிறது

### IV.எப்போது எங்கே

A. பிலி 4:4 கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்
B. சங் 35:28 நாள் முழுவதும்  துதி
C. 1 பேது 4 :12-13  உங்களைப் பகைத்து , உங்களைப் புறம்பாக்கி, உங்களை நிந்தித்து தள்ளிவிடும் போதும்  (லூக் 6: 22-23)
D. சங் 149:1 பரிசுத்தவான்களின் சபையிலே அவருடைய துதி விளங்குவதாக
E. சங் 150:1-2 பூமியனைத்தும் அவரைத் துதிப்பதாக

### V.துதியின் மகத்துவங்கள்

A. லூக் 18;42-43 குருடன் பார்வையடைந்தான்
B. அப் 3:8-9 சப்பாணியான மனிதன் சொஸ்தமானான்
C. லூக் 19:35-40 சீஷர்கள் தேவனைப் புகழ்ந்தார்கள்
D. லூக் 23:44-49 ரோம நூற்றுக்கதிபதி

### VI.சீயோனின் கீதங்கள்

A. ஏசாயா 60:18 உன் வாசல்களை துதியென்றும் சொல்லுவாய்
B. சங் 137:1-4 சிறைபிடித்தவர்கள் பாடல்களை பாடினார்கள்
C. ஏசா 35:8-10 பெரும்பாதையான வழி ; பரிசுத்த வழி
D. ஏசா 61:3 துதியின் உடை
E. 1 பேது 2:9 ராஜரீகமான ஆசாரியக் கூட்டம்
F. ஏசா 12:3-6 சத்தமிட்டுக் கெம்பிரீ.

### VII.எப்படி தேவனைத் துதித்து ஆராதிப்பது

A. யோவான் 4:21-24 ஆவியோடும் , உண்மையோடும் தொழுது கொள்ளும் காலம் வரும்
B. 1 தெச 5:16-19 எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்
C. எபி 12:28  பயத்தோடும் , பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்ய வேண்டும்
D. 1 பேது4:10-11 கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்
E. யோவேல் 2: 26 -27 தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள் ; என் ஜனங்கள் ஒருபோதும்  வெட்கப்பட்டுப் போவதில்லை
F. 1கொரி 14:40  சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது.

### VIII.உண்மையான துதியும் பொய்யான மாயையும்

A. ஏசாயா 29:13  அவர்கள் இருதயமோ எனக்குத்  தூரமாய் விலகியிருக்குறது;
B. ஏசாயா 42:8-10 என் மகிமையை வேறொருவனுக்கும் கொடேன்
C. சங் 138:1 என் முழு இருதயத்தோடும் துதிப்பேன்
D. பிலி  3:3 மாம்சீகத்தின்மேல்  நம்பிக்கையாயிராமல்

### IX.துதியின் வல்லமை

A. 2நாளா 20:20-22 யோசபாத்
B. யோசுவா 6:16 எரிகோ யுத்தம்
C. அப் 16:25 பவுலும் , சீலாவும்

**முடிவு :**

சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத்  துதிப்பதாக
அல்லேலூயா -சங் 150:6





# ஓ தேவனுக்கே துதி உண்டாகட்டும்

ஆவியோடும், உண்மையோடும் தேவனை ஆராதிப்பதை இங்கே காணலாம் . தேவனைத் துதிப்பது என்பது வார்த்தைகளை திரும்ப திரும்ப சொல்வது அல்ல மாறாக இதயத்தின் உணர்வுபூர்வ ஆராதனை. அது தேவனுக்கு கீழ்ப்படிந்து, அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தும்படியாக அவருக்கு நன்றி செலுத்துவதாகும்.

நம்முடைய இருதயம் தேவனுக்குச் செலுத்தும் துதிகளாலும் நன்றிபலிகளாலும் நிறைந்திருக்கும் போது, நம்முடைய உதடுகளினால் அதை அறிவிக்க வேண்டும்

## துதி கட்டளையிடப்படுகிறது

துதி என்பது வெறுமனே போதனை அல்ல மாறாக வேதாகமத்திலே 250 தடவைக்கும் மேலாக சொல்லப்பட்டுள்ள நாம் கடைபிடிக்க வேண்டிய கட்டளை அது. தாவீது ராஜா துதிக்குப் பாத்திரரான தேவனுடைய மகிமையின் இரகசியத்தை உணர்ந்திருந்தார். அவர் வாசல்களில் துதியோடும் அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து அவரைத் துதித்து , அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள் (சங் 100:4). மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்து, ஆனந்தசத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள் (சங் 100:2). பழைய ஏற்பாட்டு ஒழுங்கை விட ஒருபடி மேலானது. தேவனை மேன்மைமிகு அர்ப்பணிப்போடும், துதியோடும் கனம் பண்ண வேண்டும். இது மனுக்குலத்தின் கடமை. அநேக பரிசுத்தவான்களின் துதி என்பதை சாதாரண ஒரு காரியமாகத்தான் நாம் பார்க்கிறோம். வெளி 19:5,7 நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள் என்று ஒரு சத்தம் சிங்காசனத்திலிருந்து பிறந்தது தேவனுடைய ஊழியக்காரரே, அவரைத் துதியுங்கள். நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக் கடவோம் ரோமர் 15:10-11 எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள்.

## கர்த்தரே துதிக்கு பாத்திரர்

ஜாதிகளே, எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள்; ஜனங்களே, எல்லாரும் அவரைப் போற்றுங்கள், அவர் நம்மேல் வைத்த கிருபை பெரியது; கர்த்தரின் உண்மை என்றென்றைக்குமுள்ளது . அல்லேலூயா (சங் 117:1-2) . 1 நாளா 16:23-36ல் தேவனுடைய மகிமையும், கனத்தையும் எப்படி புகழ்ந்து பாடுவது என்பதை காணமுடிகிறது . அவரே சகல உலகத்தையும் ஜெனிப்பித்தவர். சகல வல்லமையையும் உடையவர் மகிமையும் கனமும் அவர் சமுகத்தில் இருக்கிறது ; வல்லமையும் மகிழ்ச்சியும் அவர் ஸ்தலத்தில் இருக்கிறது, வசனம் 29 சொல்கிறது ,கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி, காணிக்கைகளைக் கொண்டுவந்து, அவருடைய சந்நிதியில் பிரவேசியுங்கள்.

## ஸ்தோத்திரபலி

ஜனங்கள் தேவனுக்கு செலுத்தவேண்டிய துதிபலிகள் ஏராளமாயிருக்கும் போது தம்முடைய இரக்கத்தை நம்மேல் பொழியப் பண்ணுவார். அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்கு செலுத்தக்கடவோம் (எபி13;15). தேவனுக்கு செலுத்தும் நன்றிபலிகளும், துதியும், இருதயத்தில் இருக்கும்போது நம்முடைய வாய் அவைகளை அறிக்கை பண்ணும் விதமாக ஸ்தோத்திரபலியை ஏறெடுக்கும்.எனவே வார்த்தையினால் அவரை துதிசெய்து கடினமானதாக தோன்றும்போது சிந்தித்துப் பாருங்கள். நமக்காக தம்முடைய ஜீவனை தந்து இரக்கம் பாராட்டிய அவருக்கு நாம் எதை ஈடாக்க கூடும்? வாயினால் அறிக்கை செய்யும் துதியானது மேலான ஆசீர்வாதங்களை நமக்கு கொண்டுவரும்.

## துதி நிறைந்த வார்த்தைகள்

துதி நிறைந்த வார்த்தைகளால் தேவனுடைய சமுகத்தில் மகிழ்ச்சியடையலாம் . கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர் , அவர் கிருபை என்றுமுள்ளது . கர்த்தரால் சத்துருவின் கைக்கு நீங்கலாக்கி மீட்கப்பட்டு (சங் 107:1-2) துதியானது பாடல் வடிவிலும் இருக்கிறது . கர்த்தரைக் கீர்த்தனம் பண்ணி (சங் 9:11) , எபேசி 5:19-20 லே இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எபபொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்.

## கர்த்தரைத் துதிப்பதற்கான காரணங்கள்

தேவனைத் துதிப்பதற்கு பல காரணங்கள் உண்டு . துதிப்பது சூழ்நிலையைச் சார்ந்ததல்ல , ஏனெனில் தேவன் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவ ராயிருக்கிறார். அவரே என்றென்றும் துதிக்குப் பாத்திரர். இயேசுகிறிஸ்து தம் சீஷர்களிடம் உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார் (லூக் 10:19-20). உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள் (யோவேல் 2:26). கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டி பாளயத்திலே வருகிறபோது பூமி அதிரத்தக்கதாக மகா ஆர்ப்பரிப்பாய் இஸ்ரவேலரெல்லாரும் சத்தமிட்டார்கள் (1 சாமு 4:5-6) . இன்றும் தேவபிரசன்னம் நம் மத்தியிலே உலாவிக் கொண்டிருக்கிறது . ஆர்ப்பரிப்பும் , ஸ்தோத்திரபலியும் ஏறெடுக்கப்பட வேண்டும் . பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தால் நிறைந்து அநேகமாயிரம் பரிசுத்தவான்களோடு தேவனை ஆராதிப்பது

எவ்வளவு இன்பமும் ஏற்றதுமாயிருக்கிறது. கர்த்தரைத் துதியுங்கள்; நம்முடைய தேவனைக் கீர்த்தனம் பண்ணுகிறது நல்லது, துதித்தலே இன்பமும் ஏற்றது மாயிருக்கிறது (சங் 147:1). துதியை விட்டுவிட்டு ஆராதிக்கும் கிறிஸ்தவர்களை இயேசுவின் நாமத்தினாலே எச்சரிக்கிறேன்.



**துதி என்பது ஆராதனையில் பயிற்றுவிக்கப்படுவது அல்லமாறாக அனுதின வாழ்வின் ஓர் அங்கம்**

## எப்போது துதிக்க வேண்டும்?

கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷ மாயிருங்கள் (பிலி 4:4). நாள்முழுதும் உமது துதியையும் சொல்லிக் கொண்டிருக்கும் (சங் 35:28). கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும் போது நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள் (1பேது 4:12-13). நாம் அவருக்காய் பாடுபட வேண்டியதாயினும் அவருடைய நாமம் மகிமைப்படவேண்டும் .துதி என்பது ஆராதனையில் மட்டும் ஏறெடுக்க வேண்டியது அல்லது .நம் அனுதின வாழ்வின் ஒவ்வொரு வேளையும் கடைபிடிக்க வேண்டிய ஒன்று. பரிசுத்தவான்களின் சபையிலே அவருடைய துதி விளங்குவதாக (சங் 149:1). அவருடைய வல்லமையுள்ள கிரியைகளுக்காக அவரைத் துதியுங்கள் (சங் 150:1-2) . பரிசுத்தமான இதயத்திலிருந்து வெளிப்படும் உண்மையான அன்பின் ஆராதனையின் அடையாளமே தேவனை துதித்து அவருடைய நாமத்தை மகிமைப்படுத்துவதே.

## வேதாகமத்திலுள்ள சான்றுகள்

ஆதி திருச்சபைகளில் துதியின் வகைகளும் அதன் முறைமைகளும் பின்பற்றப்பட்டது . இயேசு குருடனை சொஸ்தமாக்கிய போது, அவன் பார்வையடைந்து தேவனை மகிமைப் படுத்தினான். ஜனங்களெல்லாரும் அதைக் கண்டு தேவனைப் புகழ்ந்தார்கள் (லூக் 18:42-43) . தேவாலயத்தின் அலங்கார வாசலண்டையிலே பிச்சை கேட்டு உட்கார்ந்திருந்த சப்பாணியானவன் சொஸ்தமாக்கப்பட்ட போது குதித்து, தேவனைத் துதித்தான் (அப்போ 3:8-9). தேவாதி தேவன் இயேசு கிறிஸ்து கழுதைக் குட்டியாகிய மரியின் மேல் ஏறி வரும்போது ஜனங்கள் ஓசன்னா என்று சொல்லி துதித்தார்கள் .கர்த்தருடைய நாமத்தினாலே சமாதானமும் உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக என்று மிகுந்த சத்தத்தோடே தேவனைப் புகழ்ந்தார்கள் (லூக் 19:37). அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக ; இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் (40)
தேவனுக்குப் பயப்படுகிற பயம் தேவஜனங்களுக்குள் முடங்கிப்போகும்போது கர்த்தராகிய தேவன் அவரைக் கூப்பிடச் செய்பவர்.

## சீயோனின் துதிகள்

சீயோனின் மதில்களை (தேவசபை) இரட்சிப்பென்றும், உன் வாசல்களைத் துதியென்றும் சொல்லுவாய் (ஏசாயா 60 : 18). சீயோனின் துதிகளுக்குள் நாம் பிரவேசிக்கும் போது நம்முடைய ஆழ்ந்த துயரங்கள், கசப்புகள் எல்லாம் மாறிப்போகும். தேவமகிமையினால் நாம் ஒன்றாக்கப்படுவோம். தேவஜனங்களுடைய துதியை எதிரியானவன் சீர்குலைக்க முயற்சிப்பான்.

பாபிலோன் ஆறுகள் அருகே நாங்கள் உட்கார்ந்து, அங்கே சீயோனை நினைத்து அழுதோம்.அதின் நடுவிலிருக்கும் அலரிச் செடிகளின் மேல் எங்கள் கின்னரங்களைத் தூக்கி வைத்தோம். எங்களைச் சிறைபிடித்தவர்கள் அங்கே எங்கள் பாடல்களையும், எங்களைப் பாழாக்கினவர்கள் மங்களகீதத்தையும் விரும்பி : சீயோனின் பாட்டுகளில் சிலதை எங்களுக்குப் பாடுங்கள் என்று சொன்னார்கள்.கர்த்தரின் பாட்டை அந்நிய தேசத்தில் பாடுவதெப்படி ? (சங் 137 : 1-4).ஆனால் அவர்கள் சிறையிருப்பில் இருந்து திரும்பி வரும்போது கர்த்தரைப் பாடி மகிழ்ந்தார்கள்.இதுதான் தேவ ஜனங்களின் உண்மையான நிலை.நீங்களோ தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் (1 பேது 2 : 9).

## ஆவியானவரின் வழிகாட்டுதல்

இயேசு : உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங் காலம் வரும் (யோவான் 4 : 23). சத்திய வாழ்வில் ஆவியானவரின் வழிநடத்துதலோடு துதி செலுத்தப்பட வேண்டும். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செலுத்தும்போது, ஆவியை அவித்துப் போடாதிருங்கள் (1 தெச 5 : 19). ஆதலால் அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக் கொள்ள கடவோம் (எபி 12 : 28).சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக் கடவது (1 கொரி 14 : 40). உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள்; என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை (யோவேல் 2 : 26-27).

இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படி செய்வீர்களாக (1 பேது 4 : 10-11). மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்ய வேண்டும் (பிலி 3 : 3).

## துதியின் வல்லமை

தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்.அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது (ஏசாயா 29 : 13).இந்த மாதிரியான துதிகளில் தேவன் பிரியப்படுவதில்லை.அவரை முழு இருதயத்தோடும் தேடுகிற உள்ளத்தையே அவர் விரும்புகிறார். இன்று பல கிறிஸ்தவ ஆராதனைகளில் துதி ஆராதனை என்று சொல்லி உதடுகளினால் கர்த்தரை கனம் பண்ணும் செயல் எதிரியான பிசாசானவனின் தந்திரமான காரியம். தேவஜனங்களின் இருதயத்தை திசை திருப்பும் செயல். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், முழு உள்ளத்தோடும் நம்முடைய வாழ்விலே அவருக்கு முதலிடம் கொடுத்து, தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியாய் அவருக்கே சகல கனமும் அருளிச் செய்யப்படும்படியாய் வாழ வேண்டும்.

# கேள்விக்கு என்ன பதில்?

**நம்முடைய சபை ஆராதனைகளில் இசைக்கருவிகளைப் பயன்படுத்தாமல், துதியைக் குறித்து சங்கீத புஸ்தகத்தில் இருந்து மேற்கோள் காட்டுவது முரணானதா?**

தாவீது ராஜா, பாவம் செய்தபோதிலும், துதிகளிலும், சங்கீதங்களிலும் பேர்பெற்றவர். சங்கீத புஸ்தகம் முழுவதுமே தாவீதுராஜா தேவனுக்கு செலுத்திய துதிகளும், ஸ்தோத்திரமும் அடங்கியதே.சங்கீதம் 150 ல் தாவீதுராஜா சொன்னதுபோல வீணையோடும் சுரமண்டலத்தோடும் அவரைத் துதிக்க கடவோம். ஏனெனில் தாவீதுராஜா வாழ்ந்த நாட்கள் மோசேயின் நியாயப் பிரமாணத்தின்படி நடக்க வேண்டிய வழிகள் அவை.அது இயேசுகிறிஸ்துவின் நாட்களில்  நடைபெற்ற காரியம் அல்ல. இன்னமும் இந்த கிருபையின் நாட்களில் தாவீதின் குணாதிசயங்களும், நடக்கைகளும் நம்மை ஊக்கப்படுத்தி தேவனுக்குள் வளரச் செய்கிறது.

தாவீது மற்றும் பல தீர்க்கதரிசிகளின் வாழ்வு நமக்கு போதிப்பதற்கும், ஊக்கப்படுத்துவதற்கும் முரணானதாக முற்றிலும் எண்ணப்படலாகாது. ஏனெனில் புதிய ஏற்பாட்டின் கொள்கைகளுக்கு முரண்பாடான எந்த ஒரு நடக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

தாவீதின் துதிப்பாடல்கள் நம்மை ஊக்கப்படுத்துவதினாலும் துதிபலி என்கிற காரியம் புதிய ஏற்பாட்டின் நடை முறையோடு ஒத்துப்போவதாலும், சில காரியங்கள் ஒத்துப்போகாததாலும் ஏற்றுக்கொள்ள வேண்டிய புதியஏற்பாட்டு கொள்கைகளை மாத்திரம் கருத்தில் கொள்ள வேண்டும்.

தாவீது பலியிட்டார்.தசமபாகம் கொடுத்தார். கீதவாத்தியம் போன்ற இசைக்கருவிகளோடு தேவனை ஆராதித்தான்.ஆனால் இவையெல்லாம் புதியஏற்பாட்டு திருச்சபைகளில் காணப்படவில்லை. மோசேயின் நியாயப் பிரமாண மாம்சீக ஒழுங்கையல்லாமல் ஆவிக்குரிய ஒழுங்கை அவர்கள் கடைபிடித்தார்கள்.மேலும் புதிய ஏற்பாட்டில் இசைக்கருவிகள் பயன்படுத்த அறிவுறுத்தப்படவில்லை. வரலாற்றுக் குறிப்புகளிலும் சொல்லப்படவில்லை. இசைக்கருவிகள் பயன்பாடு குறித்து மேலும் தெரிந்துகொள்ள இதழ் 21 ஐ ***www.thegospeltruth.org*** இணையதளத்தில் படிக்கவும்.

**இப்போதைய காலக்கட்டத்தில் துதி ஆராதனைகள் உண்மையாகவே ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் உள்ளதா?**



பல காரணங்களும், கேள்விகளும் இதில் அடங்கும்.சிலவற்றை நாம் இங்கே காணலாம். முதலாவது தேவனுக்கு நாம் செலுத்தும் துதிபலிகளானது அவரால் கட்டளையிடப்பட்டது. ஆகவே மாம்சீகமாக அல்ல. ஆவியோடும், உண்மையோடும் அவரைத் துதிக்ககடவோம். ஆனால் இன்றோ பல சபைகளின் ஆராதனை ஊக்குவிப்புகள் முறையாக ஆவிக்குரிய பிரகாரமாக நடைபெறுவதில்லை. பலவர்ணமான விளக்குகள், மேளதாளங்கள்,

பாடல்பாடி நடனமாடுவது இவையெல்லாம் தேவனுக்கு நாம் செலுத்தும் துதிபலியாயின் ஏன் ஒவ்வொரு முறையும் பாவத்தோடே நாம் வீட்டிற்கு திரும்பி வந்து கொண்டிருக்கிறோம். இதையெல்லாம் சிந்திக்க கடவோம். கிறிஸ்தவன் என்ற போர்வையில் அநீதியான வாழ்க்கைக்கு துதி ஆராதனை எனும் முகமூடியை தரித்து வேஷம் மாறி வாழும் வாழ்க்கையை கடைபிடித்து வருகிறோம்.

**"தேவனுக்கு கீழ்படிவதினாலே இருதயத்திலே உண்டாகும் அன்பு, அதினிமித்தம் தேவனை ஆராதிக்கும் ஆராதனையே தேவனால் அங்கீகரிக்கப்படும்"**

துதி ஆராதனையின் நாயகன் இயேசுகிறிஸ்து மட்டுமே. நாம் வாழும் இந்நாட்களில் பங்குபெறக்கூடிய ஆராதனை முறைகள் மாம்சீகத்தின் வெளிப்பாடாகவும், மனுஷனுடைய திறமைகளை பிரதிபலிப்பதாகவுமே அமைகிறது.அதிலே நாம் பரிசுத்த ஆராதனையை காண இயலாது.

இசையின் நிமித்தமாக ஆராதனை ஒழுங்குகள் அதற்கேற்ப செய்யலாகாது. எண்ணம் சார்ந்த அனுபவம் என்று ஒரு ஆசிரியர் கூறுவதுபோல, உண்மையான ஆராதனையின் அடையாளம் அது அல்ல.

ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆராதனை என்பது உள்ளத்தின் ஆழத்திலிருந்து தேவனுக்கு கீழ்ப்படிந்து, பயந்து, அன்புநிறைந்த உள்ளத்தோடு ஆராதிப்போம். இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது (மத் 15 : 8).

இப்போதைய ஆராதனைகள் வெறும் வார்த்தை ஜாலமாகவும் கண்களையும், மாம்சத்தையும் கவரும் விதமாகவே அமைந்துள்ளது. நாம் ஒவ்வொருவரும் தேவனை ஆராதிப்பதற்கான தகுதியைப் பெற்றுள்ளோம். அதனை சரியான விதத்தில் செய்வோம். துரதிஷ்டவசமாக இது போன்ற ஆராதனைகள் ஆவிக்குரிய பிரகாரமாக நம்மை தேவனிடம் கொண்டு சேர்ப்பதில்லை.

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide
Indian Constitution Act 25th & 19(1) Section

**TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY**




*ஸ்திரீகளைக் குறித்தும், அவர்களுடைய தகுதியான அலங்கரிப்பைக் குறித்தும் பவுல் 1 தீமோ 2 : 9 ல் சொல்லப்பட்டுள்ளதைப் போன்று புருஷர்களும் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன் என்று சொன்னார்.*



*ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை*

## துதியின் உடை

(கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர்) ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும் அவர் என்னை அனுப்பினார் – ஏசாயா 61: 3



இயேசுகிறிஸ்து ஜனங்களுடைய பாவத்தையும், வியாதியையும் நீக்கி அவர்களை சொஸ்தப்படுத்தவே இந்த உலகத்திற்கு வந்தார். நரகத்தின் ஆக்கினைக்கென்று ஒப்புவிக்கப்பட்ட ஜனங்களை ஆவிக்குரிய குணமாக்குதலை அருளிச் செய்து விடுதலையாக்குகிறார். அழுகை ஆனந்த களிப்பாகவும், மிகுந்த சந்தோஷமாகவும் மாறும். ஏனெனில் அவர் நமக்கு துதியின் ஆடையை தந்திருக்கிறார்.

நம்முடைய இருதயம் சஞ்சலப்பட்டு நாம் நொறுக்கப்படும் போது தேவனை நோக்கி கூப்பிடும் போது மன சந்தோஷமும் சமாதானமும் நமக்குத் தருவார்.

பிதாவுக்கு கனமும் மகிமையும் தேவபிள்ளைகள் கொண்டுவரும் விதமாக தம்முடைய ஜனங்களுக்கு துதியின் ஆடையை தந்திருக்கிறார். நம்மைச் சுற்றியுள்ள உலகம் நம்மை வேதனைப்படுத்தும்போது, பாவம் நம்மை மேற்கொள்ளும்போதும் இரட்சிப்பினால் மாத்திரம் எல்லாவற்றையும் எதிர்கொள்ளமுடியாத சூழ்நிலை தோன்றும்போதும் தேவனுக்கு நாம் செலுத்தும் துதிபலிகளானது அந்த சூழ்நிலையை மாற்றும். இரட்சிக்கப்பட்ட ஜனங்கள் இன்றும் மாம்சீகமாகவும், உணர்வுபூர்வமாகவும் மனரீதியாகவும் பாதிக்கப்படும்போது தேவனுடைய ஆறுதல் நமக்கு தேவைப்படுகிறது. எனெனில் அதுமாதிரியான சூழ்நிலைகளின் மத்தியில் நம்பிக்கை இழந்து போகும்போது, எதிரியான பிசாசானவன் நம்மை நெருங்க எண்ணுவான். துதியின் உடையினால் நாம் சூழப்பட்டிருந்தால், இயேசு நம்மை தேற்றுவார்.

பாரமான ஆவி உங்களில் இருப்பது போல் உணர்ந்தால் தேவனை நோக்கி பாருங்கள். அவருடைய கரங்கள் துதியின் ஆடையினால் மூடப்பட்டிருப்பதைக் காணமுடியும். இருள் சூழ்ந்த வேளையிலும், பிரச்சனைகள் மத்தியிலும் துதியின் ஆவியினால்தான் சாத்தானை தோற்கடிக்க முடியும்.என்ன நேர்ந்தாலும் தேவனுடைய பாதபடியில் அமர்ந்து அவருடைய அன்புக்காகவும், இரட்சிப்பிற்காகவும் அவரைத் துதிப்போம். அவரைத் துதிக்கும்போது, பிரச்சனைகள் எல்லாம் மாறிப்போகும்.

வெறும் அழுகை மாத்திரம் நம்முடைய இருதயத்தை தேற்றாது. இயேகிறிஸ்துவை துதிக்கும் துதியில் நாம் பெலப்படும்போதுதான் நம்முடைய இருதயத்தின் வெறுமை மாறும். புயல் போன்ற பிரச்சனையானாலும் அவருக்கு நாம் செலுத்தும் துதிகளும், நன்றிபலியும் நம்மை விடுதலையாக்கும். இதற்காகவே துதியின் உடையை நாம் தரிக்க வேண்டும்.

CONTACT :-

The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

THE CHURCH OF GOD *Worship Place:*

**Church Street, Kolarpatti, Pollachi-Taluk - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - தாலுகா - 642 107**

SUNDAY SERVICE : 10 AM - **ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எந்த ஆலயத்திற்கும் செல்லாமல் இருப்பவர்கள் எங்களுடன் பரிசுத்தஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

Come & Worship with us on Real Truth Phone (போன்) : 9597562641

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 -KOLARPATTI, POLLACHI TALUK, SOUTH INDIA - 642 107. Phone : 04259 - 280488 Cell : 95975 62641.
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, J.Grace Johnsy, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316